டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 12.10.2025 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 094 - Madurai | Online Edition

# இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவன சிறப்பு வேளாண் நிகழ்ச்சியில் பிரதமர் பங்கேற்றார்

புது தில்லி, அக்.11

புதுதில்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தில் அக்டோபர் 11 அன்று காலை 10.30 மணியளவில் நடைபெற்ற சிறப்பு வேளாண் நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார். இந்நிகழ்ச்சியில் விவசாயிகளுடன் கலந்துரையாடிய பிரதமர் பின்னர் பொதுநிகழ்ச்சியில் பங்கேற்று அங்கு திரண்டிருப்போரிடையே உரையாற்றினார்.

விவசாயிகள் நலன், வேளாண்மையில் தற்சார்பு, ஊரக உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல் என்ற பிரதமரின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டை இந்நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகிறது.

நவீன வேளாண் நடைமுறைகள், விவசாயிகளுக்கு ஆதரவு, விவசாயிகளை மையப்படுத்திய முன்முயற்சிகளின் குறிப்பிடத் தக்க சிறப்புகளை கொண்டாடுதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதாக இந்த நிகழ்ச்சி இருக்கும்.

வேளாண் துறையில் ரூ.35,440 கோடி ஒதுக்கீட்டுடனான 2 முக்கிய திட்டங்களை பிரதமர் இதில் தொடங்கி வைத்தார். மேலும் ரூ.24,000 கோடி முதலீட்டில் பிரதமரின் தன்-தான்ய விவசாய திட்டத்தையும் அவர் தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியின் போது இயற்கை வேளாண்மைக்கான தேசிய இயக்கம், மைத்ரி தொழில்நுட்பாளர்கள், பிரதமரின் விவசாய வள மையங்கள், பொதுசேவை மையங்கள் ஆகியவற்றின் கீழ் விவசாயிகளுக்கு சான்றிதழ்களையும் பிரதமர் வழங்கினார்.

# பழங்கள் மற்றும் காய்கறிகளில் மதிப்புக்கூட்டுதல் தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி நடைபெற்றது

புதுக்கோட்டை, அக்.11

புதுக்கோட்டை மாவட்டம், வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பழங்கள் மற்றும் காய்கறிகளில் மதிப்புக்கூட்டுதல் தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி 9.10.25 அன்று நடைபெற்றது.



இப்பயிற்சியில் வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சு.ப.மாரிமுத்து வரவேற்புரை வழங்கி நிகழ்ச்சியை துவக்கி வைத்து உரையாற்றுகையில் பழங்கள் மற்றும் காய்கறிகளில் அடங்கியுள்ள ஊட்டச்சத்துக்கள் மற்றும் அவற்றை மதிப்பு கூட்டுவதன் மூலம் ஏற்படும் தொழில் வாய்ப்புகளைப் பற்றி விவரித்தார்.

முனைவர் செ.ஜேசுப்பிரியா பூர்ணகலா, நிலைய தொழில்நுட்ப வல்லுநர் (உணவியல் மற்றும் ஊட்டச்சத்தியல்) தக்காளி கெட்சப் தயாரித்தல் பற்றிய செயல் விளக்கம் மற்றும் பயிற்சி அளித்தார். இப்பயிற்சியில் 20 தொழில் முனைவோர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியினை தொழில்நுட்ப உதலியாளர்கள் கருப்பசாமி, அமுல்ராஜ் மற்றும் தினகரன் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# காளான் வளர்ப்பு குறித்த ஒரு நாள் கட்டண பயிற்சி

திருச்சி, அக்.11

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் கிராமப்புற இளைஞர்கள், பெண்கள் தொழில்முனை வோராக பல்வேறு பயிற்சிகள் அவ்வப்போது நடைபெற்று கொண்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக வருகின்ற 16.10.25 வியாழக் கிழமை அன்று காளான் வளர்ப்பு குறித்த சான்றிதழ் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**பயிற்சியின் முக்கிய அம்சங்கள்** : பல்வேறு வகையான காளான்களை கண்டுபிடித்தல், அவற்றை வளர்க்கும் முறைகள், நிர்வாகம், வணிக காளான் வளர்ப்பு செயல் விளக்கம், காளான் வளர்ப்பில் அனுபவம் வாய்ந்த தொழில் முனைவோர்களின் சொற்பொழிவு, சந்தை தகவல், காளானில் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களின் தயாரிப்பு முறைகள், போன்றவை.

பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு பயிற்சி கையேடு, போன்றவை பயிற்சியின் போது எடுத்துரைக்கப்படும். பயிற்சி காலை 9.30 மணி முதல் 5 மணி வரை நடைபெறும்.

- 15.10.25 புதன்கிழமை வரை பதிவு செய்பவர்கள் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். முன்பதிவு அவசியம்.
- பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு பயிற்சி கையேடு, பயிற்சி சான்றிதழ் மதிய உணவு வழங்கப்படும்,
- பயிற்சியில் கலந்து கொள்ள விழைவோர் பயிற்சி நாளன்று காலை 9 மணிக்கு வருகை புரிந்து பயிற்சி கட்டணம் ரூ.590/- நேரிடையாக செலுத்தவேண்டும்.
- பயிற்சியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு முனைவர் சி.ராஜா பாபு, திட்ட ஒருங்கி ணைப்பாளர், சிறுகமணி வேளாண்மை அறிவியல், தொலைபேசி எண் : 0431-2962854, 91717 17832, 99447 53354, 88381 26730, 94438 12730 என்ற எண்களை அலுவலக நேரத்தில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை தொடர்பு கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# பிரதான் மந்திரியின் வேளாண் வளர்ச்சிக்கான திட்டம்




கோயம்புத்தூர், அக்.11

கோவை மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையத்தில் ஊனிம்-ம்லுகூஷ பிரதான் மந்திரி தன் தானிய கிருஷி யோஜனா திட்டமான விவசாய உற்பத்தி திறனை மேம்படுத்துதல், பயிர் பன்முகப்படுத்துதல், ஊக்குவித்தல், விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துதல் மற்றும் உணவு பாதுகாப்பை வலுப்படுத்துதல் ஆகிய நோக்கங்களைக் கொண்ட ஒரு விரிவான மத்திய வேளாண்மை திட்டத்தை நமது பாரத பிரதமர் நரேந்திர மோடி, அக்டோபர் 11 அன்று தொடங்கி வைத்தார். இந்தத் திட்டத்தின் மூலம் நமது இந்தியா நாட்டின் வெவ்வேறு மாநிலங்களில் இருந்து நூறு வேளாண்மை அறிவியல் நிலையங்களில் உள்ள விஞ்ஞானிகள் மற்றும் அவர்களுடன் தொடர்பு உள்ள விவசாயிகள் புதுதில்லியில் உள்ள தேசிய வேளாண் அறிவியல் வளாகத்தில் நேரடியாக கலந்து கொண்டனர். மேலும் இந்த நிகழ்ச்சி நேரடியாக ஒளிபரப்பப் பட்டது. நமது வேளாண்மை அறிவியல் நிலையத்தின் சார்பில் சுமார் 200க்கும் மேற்பட்ட முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டு புதிய தொழில்நுட்பங்களையும் அறிந்து கொண்டனர். இந்த நிகழ்வில் விவசாயிகளுக்கு தேவையான இடுப்பொருட்களான விதைகள், நுண்ணூட்டங்கள், உயிர் உரங்கள், மேம்படுத்தப்பட்ட கோழிக்குஞ்சுகள் முதலியன விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வின் ஒரு பகுதியாக காருண்யா நிகர்நிலை பல்கலைக்கழகத்தின் வேளாண் இறுதி ஆண்டு மாணவர்களும் கிராம தங்கள் திட்டத்தின் மூலம் தங்களின் அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர். மேலும் அவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

இறுதியாக இந்த நிகழ்வில் காரமடை வட்டாரத்தின் வேளாண்மை உதவி இயக்குனர் பாக்கியலட்சுமி கலந்து கொண்டு வேளாண்மை திட்டங்கள் பற்றியும் எடுத்துரைத்தார். மேலும் இந்த நிகழ்வில் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் தோட்டக்கலை வல்லுநர் சகாதேவன் நன்றியுரை கூறினார்.

Rithvik Pipe

IS 4985 : 2021 | IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW | isha | POWERGRID | BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# பிரதம மந்திரி தன்–தன்ய கிரிஷி யோஜனா காணொலி நிகழ்ச்சி



கடலூர், அக்.11

கடலூர் மாவட்டம், விருத்தாசலம், வேளாண்மைஅறிவியல் நிலையத்தில் 11.10.25 (சனிக் கிழமை) அன்று 'பிரதம மந்திரி தன்–தன்ய கிரிஷி யோஜனா', காணொலி நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை திட்ட ஒருங்கிணைப்பாளர், முனைவர் க. நடராஜன், துவக்கி வைத்து, எண்ணெய் வித்து பயிர்களில் விதை உற்பத்தி, மேலாண்மை தொழில்நுட்பங்கள் மற்றும் மத்திய, மாநில அரசின் திட்டங்கள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். மேலும், முனைவர் க.கலைச்செல்வி, இயற்கை விவசாயம், அங்கக வேளாண்மை மற்றும் ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்தும் எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியில் பாரத பிரதமர் விவசாயிகளுடன் நேரலையாக காணொலி மூலம் உரையாற்றினார். விவசாயிகளுக்கு உதவும் வகையில் ரூ.24,000 கோடி தன் தானிய யோஜனா திட்டத்தை, பாரத பிரதமர் மோடி துவக்கி வைத்தார். இந்த திட்டம், 2025–2026 முதல் 6 ஆண்டு காலத்திற்கு, ரூ.24,000 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

முதற்கட்டமாக நாட்டின் 100 மாவட்டங்களில் விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் விரைவான வளர்ச்சியை அடைவதே இந்த திட்டத்தின் நோக்கம். 2025–2026 பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டம், லட்சிய மாவட்டங்கள் திட்டத்தின் வெற்றியை அடிப்படையாகக் கொண்டது. விவசாய உற்பத்தித் திறன், பயிர் பல்வகைப் படுத்தல், நீர்ப்பாசனம் மற்றும் கடன் கிடைக்கும் தன்மையை மேம்படுத்த, 11 அமைச்சகங்களின் 36 திட்டங்களை ஒன்றிணைப் பதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் குறைந்த உற்பத்தித் திறன், மிதமான பயிர் அடர்த்தி மற்றும் சராசரிக்கும் குறைவான கடன் அணுகல் ஆகியவற்றின் அடிப்படையில் ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் குறைந்தது ஒரு மாவட்டமாவது தேர்ந்தெடுக்கப்படும்.

மாநிலத் திட்டங்கள் மற்றும் தனியார் துறையுடன் கூட்டாண்மை மூலம் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டம் நாடுமுழுவதும் 1.7 கோடி விவசாயிகள் பயன்பெறுவார்கள்.

திட்டத்தை திறம்பட செயல்படுத்தவதற்காக மாவட்டம், மாநில மற்றும் தேசிய அளவில் குழுக்கள் அமைக்கப்படும். அதே நேரத்தில் கள வருகைகள், மதிப்பாய்வுகள் மற்றும் கண்காணிப்புக்காக மத்திய அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள். இந்நிகழ்ச்சியில் கடலூர் மாவட்டத்தை சேர்ந்த 300-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.



# நிலவேம்பின் நன்மைகள் – ஓர் பார்வை



நிலவேம்பு தாவரத்தின் அறிவியல் பெயர் 'ஆண்ட்ரோகிராபிஸ் பானிகுலேட்டா' ஆகும். இவை அகாந்தேசி என்ற தாவர குடும்பத்தை சேர்ந்தது. நிலவேம்பு கசப்பு சுவையுடைய தாவரங்களின் ராசா என அழைக்கப்படுகிறது. இத்தாவரம் இந்தியா மற்றும் இலங்கையில் அதிக அளவில் காணப்படுகிறது. மேலும் தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் பெருமளவில் பயிரிடப்படுகிறது. 30 முதல் 110 செ.மீ வரை வளரும் தன்மை கொண்டது.

இதன் இலை மற்றும் தண்டு ஆகியவை சித்த மருத்துவத்தில் அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது. மனிதர்களை அடிக்கடி பாதிக்கும் பல தொற்று நோய்களில் இருந்து அனைவரையும் பாதுகாக்க பயன்படுவது நிலவேம்பு கசாயம் தான். உடலில் நுழையும் பல வைரஸ் கிருமிகளை எதிர்த்து போராடி மனிதர்களை நோயில் இருந்து பாதுகாக்கும் சிறந்த மற்றும் பாரம்பரிய மூலிகையாக நிலவேம்பு விளங்குகிறது.இதற்கு காரணம் இவற்றில் உள்ள டைட்டர்பீன்கள் மற்றும் ஆண்ட்ரோ கிரோபோலைடுகள் ஆகிய முக்கிய கூறுகளே.

மழை காலங்களில் மனிதர்களை அதிகம் தாக்கும் மலேரியா, டெங்கு, விச காய்ச்சல் மற்றும் சிக்குன் குனியா ஆகிய நோய் களுக்கு சிறந்த பக்கவிளைவுகள் இல்லாத மூலிகை மருந்தாக நிலவேம்பு செயல்படுகிறது. மேலும் கல்லீரல் செயல்பாடுகளை மேம்படுத்துதல் ஆகிய முக்கிய பணிகளை நிலவேம்பு செய்கிறது. உடல் பலவீனம், சோர்வை போக்குதல், குடல் ஓட்டுண்ணியை அழித்தல், மண்ணீரல் பலவீனம் மற்றும் மலச்சிக்கல் நீக்குதல் ஆகிய நோய்களுக்கு சிறந்த மருந்தாக நிலவேம்பு பயன்படுத்தப் படுகிறது. தற்போது பரவி வரும் டெங்கு காய்ச்சலை உருவாக்கும் கிருமிகளை எதிர்த்து மேலும் மனித உடலில் வலுவான எதிர்ப்பு சக்தியை உருவாக்கும் தன்மை கொண்ட சிறந்த மூலிகையாக நிலவேம்பு உள்ளது.

**நிலவேம்பு கசாயம் செய்யும் முறை :** ஒரு பாத்திரத்தில் 2 டம்ளர் தண்ணீர் எடுத்து கொண்டு, அதனுடன் 2 டீஸ்பூன் நிலவேம்பு பொடியை கலந்து, தண்ணீர் 1 டம்ளர் ஆகும் வரை நன்கு கொதிக்க வைக்க வேண்டும். பின்னர் கசாயத்தை வடிகட்டி குடிக்க வேண்டும்.

**நிலவேம்பு கசாயத்தை அருந்தும் அளவு**

2 முதல் 5 வயதுள்ள குழந்தைகளுக்கு – 5மி.லி/ ஒரு நாளைக்கு
5 முதல் 8வயதுள்ள குழந்தைகளுக்கு – 10மி.லி/ஒரு நாளைக்கு
8 முதல் 12 வயதுள்ள சிறுவர்களுக்கு – 20 மி.லி/ ஒரு நாளைக்கு
12 முதல் 15 வயதுள்ள பிள்ளைகளுக்கு – 30மி.லி/ஒரு நாளைக்கு
15 வயதிற்கு மேல் உள்ளவர்களுக்கு – 50மி.லி/ஒரு நாளைக்கு குடிக்காலம்.



குறிப்பு : நிலவேம்பு கசாயத்தை எப்போதும் சாப்பாட்டிற்கு முன் அருந்துவது உடலுக்கு சிறந்தது.

நிலவேம்பு கசாயத்தை பருகுவோம்!! உடலை நோய் கிருமியில் இருந்து பாதுகாப்போம்!!!

தகவல் : **இரா.ஜெயசங்கரமூர்த்தி, (முதுகலை வேளாண்மை), வேளாண் ஆலோசகர், கைபேசி எண் : 89404 75344, Email : agrijay 102@gmail.com**


## 42 ஆயிரம் கோடிக்கும் அதிக மதிப்புள்ள விவசாய திட்டங்களின் பரிசு நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சி

திருச்சி, அக்.11

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு வேளாண் சார்ந்த பயிற்சிகள், செயல்முறை விளக்கங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் வழங்கப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக பாரத பிரதமரின் விவசாய சகோதர சகோதரிகளுக்கு 42 ஆயிரம் கோடிக்கும் அதிகமான மதிப்புள்ள விவசாய திட்டங்களின் பரிசு நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சியானது சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 11.10.25, சனிக்கிழமை) காலை 11.00 மணியளவில் விவசாயிகளுக்கு நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது.

இதில் பிரதமரின் தன் – தன்யா வேளாண்மை திட்டம் மற்றும் பயிர் வகைகள் தன்னிறைவு இயக்கம் தொடக்கம் மற்றும் வேளாண் உள் கட்டமைப்பு நிதியும், கால்நடை பராமரிப்பு, மீன் வளம் மற்றும் உணவு பதப்படுத்துதல் துறையின் 1110–க்கும் மேற்பட்ட திட்டங் களின் தொடக்க விழா மற்றும் அடிக்கல் நாட்டுதல் விழாவின் நிகழ்ச்சி ஆனது நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. கலந்து கொண்ட விவசாயிகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# பிரதான் மந்திரி தன் தன்யா கிரிஷி யோஜனா திட்ட துவக்க விழா



விருதுநகர், அக்.11

விவசாயத் துறையை மேம்படுத்துவதற்காக இந்திய அரசு புதிதாக அறிவித்த ஒரு திட்டம் தான் பிரதான் மந்திரி தன்–தன்யா க்ரிஷி யோஜனா. இந்த திட்டம் விவசாய முறைகளை நவீனமயமாக்குவதையும் விவசாயி களுக்கு நிதி பாதுகாப்பை வழங்குவதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

பிரதான் தன் தன்யா கிரிஷி யோஜனா (ணேனி–ம்ம்லுக்ஷூ) என்பது குறைந்த உற்பத்தித்திறன் கொண்ட 100 மாவட்டங்களில் விவசாய உற்பத்தியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு விரிவான திட்டமாகும். இந்தத் திட்டம் 2025 முதல் 2031 வரை 6 ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படும். இதன் முக்கிய நோக்கங்கள் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல், நீர்ப்பாசனம், சேமிப்பு மற்றும் கடன் வசதிகளை அதிகரித்தல் மற்றும் விவசாயி களுக்கு நிலையான விவசாய முறைகளைப் பயன்படுத்த உதவுதல் ஆகும். இத் திட்டத்தின் தொடக்க விழா புதுதில்லியில் பாரத பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். இந்த திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கபட்ட 100 மாவட்டங்களில் விருதுநகர் மாவட்டமும் ஒரு மாவட்டம்.

அதன் நேரடி காட்சிகள் விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் ஒளிபரப்பப்பட்டது. மேலும் வேளாண்மை அறிவியல் நிலைய தொழில்நுட்ப வல்லுநர்கள் முனைவர் கண்ணன், பயிர் கழிவு மேலாண்மை பற்றி எடுத்துகூறினார். முனைவர் ஷீபா, பேராசிரியர், ராபி பருவத்திற்கேற்ற அதிக மகசூல் தரும் புதிய இரகங்களை பற்றி விளக்கமளித்தார். முனைவர் கிருஷ்ண குமார், உதவி பேராசிரியர், இயற்கை வேளாண்மையில் கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

முனைவர் வேணுதேவன், உதவி பேராசிரியர், பயறுவகை பயிர்களில் சாகுபடி மற்றும் விதை உற்பத்தி தொழில் நுட்பங்களைப் பற்றி தெளிவாக கூறினார். முனைவர் ஜட்டா கவிதா, இணை பேராசிரியர், ராபி பயிர்களில் மேற்கொள்ள வேண்டிய ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை பற்றி எடுத்துரைத்தார். சிறுதானியங்களில் அறுவடை பின்சார் மற்றும் மதிப்புக்கூட்டுதல் பற்றி முனைவர் நல்லகுறும்பன், இணை பேராசிரியர், பயிற்சி அளித்தார். இப்பயிற்சியில் ஜீவா பண்ணை மேலாளர்கள், அங்கக இடுபொருட்கள் தயாரிப்பு பற்றி செயல் விளக்கம் அளித்தார்.



# காட்டு பன்றிகளை கட்டுப்படுத்துவது எப்படி?



இன்றைய கால கட்டத்தில் பூச்சி/நோய் தாக்குதலை கூட எளிதாக சமாளித்து விடலாம். ஆனால் காட்டுபன்றிகளின் அட்டகாசம் நாளுக்கு நாளாக தீவிரமாக உள்ளதாக விவசாயிகள் புலம்பி வருகின்றனர். இதனாலே பல விவசாயிகள் மானாவாரியாக நிலக் கடலை மற்றும் மக்காசோள சாகுபடியை தவிர்த்து தென்மாவட்டங் களில் தரிசாக போட்டு வருகின்றனர்.

ஒரு காலத்திலே அங்கோ இங்கோ என்று இருந்து காட்டு பன்றிகள் தற்போது எங்குமே காணப்படுகிறது. குறிப்பாக மக்கா சோளம், கரும்பு, வாழை, நிலக்கடலை விவசாயிகள் அதிகமாக பாதிக்கப்படுகின்றனர். இது பாதுகாக்க பட வேண்டிய விலங்குகள் பட்டியலில் இருப்பதால் இதனை சட்டப்படி கொல்வது தண்டனைக் குரிய குற்றம் என்பதை விவசாயிகள் அறிந்து கொள்ள வேண்டும்.

**எப்படி கட்டுப்படுத்துவது?**

இதுவரை சரியான கட்டுபாடு முறைகள் குறித்து சரியான தொழில்நுட்பங்கள் இல்லை. இருந்தாலும்கூட கே.வி.கே. விரிஞ்சிபுரத்தில் இருந்து காட்டு பன்றி விரட்டி தைலம் (மருந்து) விற்பனை செய்யப்படுகிறது. அதனை வயலைச்சுற்றி சிறிய பாட்டில்களில் கட்டி தொங்க விடுவதன் மூலமாக அந்த திரவம் காற்றில் ஆவியாகி அதனுடைய வாசனை உணரும் பன்றிகள் அந்த நிலத்திற்கு வருவதில்லை என்கிறார்கள்.

**விவசாயிகளின் அனுபவத்தில் பன்றிகளை கட்டுபடுத்திய முறைகள்**

1) வயலைச்சுற்றி சிவப்பு நிற சேலைகளை வேலிகளாக கட்டுதல்.

2) மயிர் (தலைமுடி) - இதனை முடி வெட்டும் கடைகளில் சேகரித்து வரப்பை சுற்றி போடுதல். இதை பன்றி முகர்ந்து பார்த்தால் அந்த முடி பன்றியின் மூக்கில் போய் ஒரு வித தாக்கம் ஏற்படுவதால் உடனடியாக வெளியேறி விடும்.

3) பன்றிகளை விரட்ட நம்முடைய கிராமங்களில் இருக்கும் நாட்டு பன்றிகளின் சாணத்தை சேகரித்து தண்ணீரில் கரைத்து வரப்பு ஓரங்களில் உள்ள பயிர்களில் தெளித்தால் அந்த வாடை ஒவ்வாமை ஏற்பட்டு ஓடிவிடுவாத கூறுகின்றனர்.

4) நிலத்தை சுற்றி பெரிய விவசாயிகள் 3X3X3 நீளம் ஆழம் உயரமுள்ள (காண்) அகழி வெட்டி விடவேண்டும். இதன் வழியாக பன்றிகள் நிலத்திற்குள் நுழைய முடியாமல் பள்ளத்தில் விழுந்து விடும். மழைக்காலங்களில் அதில் தண்ணிர் தேங்கி இருப்பதால் நிலத்தின் ஈரத்தன்மை காக்கப்படுவதுடன் மகசூலும் அதிகமாகும்.

5) ஹெர்பாலிவ் என்ற திரவத்தை (REPELLANT) தனியார் பூச்சி மருந்து கடைகளில் கிடைக்கும் வாங்கி தெளிக்கலாம்.

6) காட்டுபன்றிகள் பொதுவாக பகலில் பதுங்கி இருப்பது வழக்கம், இரவினில் தான் அவை கூட்டம்கூட்டமாக நிலத்தில் உள்ள பயிரை சேதப்படுத்தும். அவற்றை விரட்டிட சூரிய ஒளியால் இயங்கும் பலகுரல் விரட்டி அலாரத்தை வாங்கி நிலத்தில் நிறுவிடலாம்.

7) பண்டைய காலத்தில் இருந்தது போல கிராம காவல் (இரவு ரோந்து பணிகளை) அமைத்து பன்றிகளை விரட்டலாம்.

8) தமிழக அரசு பன்றிகளை கட்டுப்படுத்த கிராம அளவில் கிராம நிர்வாக அலுவலர் தலைமையில் குழு அமைக்கப்பட்டு, வனத் துறையின் ஆலோசனையின் பேரில் செயல்படுகிறது. அந்த குழுவில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் நிவாரண பெற புகார் மனு தரலாம்.

9) வரப்பை சுற்றி வற்றி ஆமணக்கு சென்டு மல்லி, மஞ்சள் கிழங்கு சாகுபடி செய்ய பட்டால் அந்த வாசனையால் காட்டுபன்றி நடமாட்டம் குறையும் என பல விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

10) சூரிய மின்சார வேலி அமைப்பது/முள் வேலி அமைப்பது போன்றவற்றை அமைத்தால் நிரந்தர தீர்வு காண முடியும்.

11) பன்றிகள் பகலில் பதுங்கும் இடங்களில் உள்ள சீமைக் கருவேல் மற்றும் புதர்களை அகற்றிட வேண்டும். இவ்வாறாக செய்தால் பன்றிகள் ஓடி விடும்.

எனவே விவசாயிகள் மேலே குறிப்பிட்டவற்றை தங்களுடைய நிலங்களில் பயன்படுத்தி, காட்டு பன்றிகளை கட்டுபடுத்திட முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.

# அனைவருக்கும் தேவையே! ஜோதிட ஆலோசனைகள்!!

# அகத்தியர் ஆஸ்ட்ரோ சென்டர்



வாட்ஸப் மூலம் ஜோதிடம் மற்றும் தீர்வுகள்

**DOCTOR OF ASTROLOGY**

**பா.இளங்கோவன்**

**M.Sc., MBA, D.Astro, Phd.,**

**ஜோதிட எண் கணித, வாஸ்து நிபுணர்**



13 ஜி, மருதமலை ரோடு, ஏ.ஒன்.சிப்ஸ் எதிரில் பாப்பநாயக்கன் புதூர், கோவை - 641 041

**தொடர்புக்கு 98420 07125**

ஜோதிடம், எண் கணிதம், கைரேகை, வாஸ்து திருமணப் பொருத்தம், நிறுவனப் பெயர் வைத்தல், அதிர்ஷ்டக் கல், விவாகரத்துப் பெற்றவர்கள், பெற உள்ளவர்கள் இல்லத்திற்கே வந்து கட்டணத்துடன் ஜோதிட ஆலோசனை தருகிறோம்.







குழந்தையின் கல்வி மற்றும் எதிர்காலம்
இரத்தினக் கற்களுக்கு சிறப்பு ஆலோசனை
அதிர்ஷ்டம் பெற, வெளிநாடு செல்ல மற்றும் தொழில் வாய்ப்பு ஆலோசனை
திருமணமாகாத பெண்களுக்கு வரன் வரும் திசை மற்றும் அஷ்டவர்க்க துல்லிய ஆலோசனை

- ஒரு குடும்பத்தில் 5 நபருக்கு மேல் ஜோதிடம் பார்த்தால் ஒருவருக்கு இலவச ஜோதிடம்
- ஜோதிடம் கற்க ஆன்லைனில் ஜோதிட வகுப்பு
- மாதம் ஒரு முறை கோவையில் ஜோதிடரைச் சந்திக்க வாய்ப்பு
- உங்கள் இல்லத்தில் அனைத்து விசேஷங்களுக்கும் சிறப்பு ஆலோசனை



**நீங்கள் உலகில் எந்தப் பகுதியில் இருந்தும் மேற்கூறிய தேவைகளுக்கு வாட்ஸ் ஆப் எண் : 98420 07125 மூலம் பயனடையலாம்.**

# மண், மன வளம் காக்க மாடு வளர்ப்போம்

இயற்கை விவசாயம் வேரூன்றக் காரணமானவர்களில் ஒருவர் ஐயா நம்மாழ்வார் அவர்கள். இன்றைக்கு ஏராளமான படித்த இளைஞர்கள் இயற்கை வேளாண்மை பக்கம் திரும்பியதற்கு நம்மாழ்வாரின் முப்பதாண்டு காலப் பயணத்தை முக்கியமாகச் சொல்லலாம்.

'அடி காட்டுக்கு நடு மாட்டுக்கு நுனி வீட்டுக்கு' என்பதை தராக மந்திரமாக தான் ஏறிய மேடைகளில் எல்லாம் முழங்கியவர் நம்மாழ்வார் அவர்கள். இன்றைய இளைய தலைமுறையினருக்கு உணவு சுழற்சி குறித்து எளிய வகையில் புரிய வைத்தவர். தற்சார்பு வாழ்வியல் முறையை முன்னெடுத்து இயற்கை விவசாயத்தின் மகத்துவத்தை தனது வாழ்நாள் முழுவதும் ஊர் ஊராகச் சென்று பரப்பியவர் ஐயா அவர்கள்.



தஞ்சை மண்ணில் பிறந்த ஐயா அவர்களின் அடியொற்றி, தற்போது தற்சார்பு வாழ்வியல் முறையைக் கடைப்பிடித்து, மாடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ளார் அவரது உறவினரான **டி.சம்பத்.** 52 வயதாகும் பல் மருத்துவரான இவரும் தஞ்சாவூர்காரர்தான். நம்மாழ்வாரைப் பின்பற்றி வருபவர். பள்ளிப் பருவத்திலேயே அவரது கொள்கை களால் ஈர்க்கப்பட்டவர். குறிப்பாக, மாடு வளர்ப்பின் மகத்துவத்தை நன்கு அறிந்தவர். அதைப் பின்பற்றி, தற்போது மாட்டுப் பண்ணை அமைத்து, நிர்வகித்து வருகிறார். இவரது தந்தையும் அதிக மாடுகளைக் கொண்ட பண்ணையை நிர்வகித்தவர். நஞ்சில்லா காய்கறிகளைப் பயிரிட்டு விற்பனை செய்து வந்த இவர்,

தற்போது சத்தான பால், தயிர், வெண்ணெய், நெய் ஆகியவற்றை வாடிக்கையாளர்களுக்கு அளித்து வருகிறார். பல் மருத்துவரான சம்பத், ஈ ஷா யோகா மையத்தின் தொண்டர் மற்றும் மெடிட்டேட்டர்.

இவரிடம் உரையாடினோம், இதோ, தஞ்சாவூர் அருகே உச்சி மாஞ்சோலை என்ற இடத்தில் சுமார் 4 ஏக்கர் நிலப்பரப்பில் பைரவி ஆர்கானிக்ஸ் என்ற பெயரில் மாட்டுப்பண்ணை வைத்துள்ளோம். இந்த இடத்தை 2013-ல் நான் விலைக்கு வாங்கும்போது, அது பாலை நிலமாக இருந்தது. அதை சோலையாக மாற்றினேன்.

தற்போது எங்கள் பண்ணையில், கறவை மாடுகள் – 25, சினை மாடுகள் – 15 மற்றும் கன்றுக்குட்டிகள் என மொத்தம் 80 மாடுகள் உள்ளன. கிர், சாஹிவால், தார்பார்க்கர், சிவப்பு சிந்தி ரக மாடுகளை பண்ணையில் வளர்த்து வருகிறோம்.

**கிர் ரக மாடுகள்** – குஜராத்தைச் சேர்ந்த கிர் ரக மாடு என்பது இந்தியாவின் நாட்டு மாட்டு வகைகளுள் ஒன்று. இவை உருவத்தில் பெரியதாக இருக்கும். பார்ப்பதற்கு அழகாகவும் இருக்கும். இதன் தோல் சிவப்பு நிறத்தில் இருக்கும். சில வகை கிர் பசுக்களுக்கு வெள்ளைப் புள்ளிகள் இருக்கும். காதுகள் நீண்டு, சுருண்டு இருக்கும். இதன் எடை சுமார் 300 கிலோ இருக்கும். இந்த இன மாடு நாளொன்றுக்கு 10 முதல் 18 லிட்டர் பால் கறக்கும் திறன் கொண்டது. பிரேசில் நாட்டில் சோதனைக்காக வளர்க்கப்படுகிறது. இதன் விலை ரூ.30,000 முதல் ரூ.2 லட்சம் வரை இருக்கும். இவை கிர் காடுகளில் திரிந்த பசுக்கள். இவை சிங்கத்தை எதிர்த்துச் சண்டையிடும் வலிமை கொண்டவை. அதனால், இவை திடகாத்திரமாக இருக்கும்.

**சாஹிவால் ரக மாடுகள்** – இது பால் உற்பத்திக்குப் பயன்படுத்தப் படும் நாட்டு மாட்டு இனமாகும். முக்கியமாக, இந்த ரகத்தை அதிக அளவிலான பாலைப் பெறுவதற்கு வளர்க்கலாம். பஞ்சாப், ஹரிய–ாணா மாநிலங்களில் அதிகளவில் வளர்க்கப்படுபவை. கிர் ரகத்தை விட இதில் பால் அதிகமாகக் கிடைக்கும். சிவப்பு நிறம். கன்று ஈனும் இடைவெளி– 15 மாதம். இது ஆண்டுக்கு 3000 முதல் 4000 கிலோ பால் தரும் திறன் கொண்டது.

**சிவப்பு சிந்தி** – இதுவும் நாட்டு மாட்டு இனங்களில் ஒன்றாகும். இது பாகிஸ்தானின் சிந்து மாகாணப் பகுதியைச் சேர்ந்தது. அதுபோல, தார் பார்க்கர் ரக மாடுகளும் ஜோத்பூர், பார்மர், ஜெய்சால்மர் பகுதிகளில் அதிகம் வளர்க்கப்படுகின்றன. இந்த ரக மாடுகள் நாள் ஒன்றுக்கு 8 முதல் 10 லிட்டர் வரை பால் கொடுக்கும்.

வடஇந்திய மாடுகள் அதிகம் பால் தரக் கூடியவை என்பது கவ–னிக்கத்தக்கது. இந்த ரக மாடுகள் உயர் ரக மாடுகள் என்பதால், பராமரிப்பில் அதிக கவனம் செலுத்தி வருகிறோம். நீர்ப் பயன் பாட்டைப் பொருத்தவரையில், நீர்த் தெளிப்பான்களைப் பயன் படுத்துகிறோம். மாடுகளுக்கு சூப்பர்நேப்பியர் புல்லை உணவாக அளிக்கிறோம். புழுங்க தவிடு, கோதுமை தவிடு, பருத்திக்கொட்டை, பிண்ணாக்கு, சோள மாவு, கம்பு மாவு ஆகியவற்றை கலந்து உணவாக அளிக்கிறோம்.

இந்த மாடுகளின் மூலம் கிடைக்கும் கோமியம், சாணம் ஆகிய வற்றைக் கொண்டு ஜீவாமிர்தம் தயாரித்து விற்பனை செய்து, வருமானம் ஈட்டலாம்.

தமிழ்நாட்டில் உள்ள காங்கேயம், பர்கூர் இனங்கள் எல்லாம் உழைக்கும் இனங்கள்.

அதிகம் பால் பெற முடியாது. பாலில் அதிக நோய் எதிர்ப்பு சக்தி உள்ளது.



எனது வீடும் பண்ணைக்குள்ளேயே அமைந்துள்ளது. மரபு சார்ந்த வீடு. நானும் எனது மனைவியுமே இந்தப் பண்ணையைப் பாரமரிக்கிறோம். காலையில் 3.30 மணிக்கு எழுந்து, பண்ணையில் பராமரிப்புப் பணிகளைச் செய்வோம். அதன் பிறகு நான் எனது தொழிலுக்கு (பல் மருத்துவம்) சென்று விடுவேன். என் மனைவி பண்ணையைப் பார்த்துக் கொள்வார். முழு ஈடுபாட்டுடன், முழு நேரமும் செயல்பட்டால், நமது நோக்கம் நிறைவேறும்.

இந்த மாடுகளின் மூலம் கிடைக்கும் பாலை பாட்டில்களில் அடைத்து, லிட்டர் 80 ரூபாய் என்ற விலையில் காலை, மாலை இரு வேளைகளிலும் விற்பனை செய்து வருகிறோம். சுமார் 130 வாடிக்கையாளர்களுக்கு இவ்வாறு பாலை விற்பனை செய்து வருகிறோம். அதுபோல, பாலை நெய்யாக உருமாற்றி, பல்வேறு இடங்களிலும் விற்பனை செய்து வருகிறோம். நெய் ஒரு கிலோ ரூ.2,000 ஆகும்.

நம்மாழ்வார் ஐயா அவர்களைப் பின்பற்றி வருவதால், இந்தப் பண்ணை மூலம் வருவாய் ஈட்டுவது எங்களது நோக்கமல்ல. சேவை மனப்பான்மையுடன் இப்பணிகளை மேற்கொண்டு வருகிறோம். காற்று மாசில்லாமல் இருக்க வேண்டும், மருந்தில்லா நிலை உருவாக வேண்டும், சத்துமிக்க உணவுப் பொருள்களை விளைவிக்க வேண்டும் என்பதே எங்களது நோக்கம்.

15,000 ஆண்டுகளாக நமது முன்னோர்கள் விவசாயம் செய்து வருகின்றனர். சத்துமிக்க உணவுப்பொருள்களை உலகுக்கு அளித்தனர். ஆனால், நாம் கடந்த 50 ஆண்டுகளில் அவற்றை சீரழித்து விட்டோம். தற்போது உணவின் தரம் மோசமாக உள்ளது. வளர்ச்சிக் குறைபாடு அதிகம் உள்ளது. 10 பேரில் 2 பேர் கூட ஆரோக்கியமாக இல்லை. இதற்கு நாம் உண்ணும் உணவும், சுவாசிக்கும் காற்றும் ஆகும்.

இந்நிலையில், சத்தான உணவுப்பொருள்களை உற்பத்தி செய்து, வலிமையான பாரதத்தை உருவாக்க வேண்டும். மேலும், மண் வளமாக இருக்க வேண்டும். மாடு இல்லாமல் மண்ணை வளப் படுத்த முடியாது. தற்போது 80 சதவிகித விவசாயிகளிடம் மாடு இல்லை. இதற்கு பராமரிப்பது சிரமமாக இருக்கிறது என்று காரணம் சொல்கிறார்கள். ஒவ்வொரு விவசாயியும் மாடு வளர்க்க வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். மாடு வளர்ப்பு மன வளத்தை அதிகரிக்கும், உடல் வளத்தை மேம்படுத்தும் என்று கூறினார் பல் மருத்துவரும் சமூக ஆர்வலரும் மாட்டுப் பண்ணையைச் செவ்வனே நடத்திவரும் டாக்டர் டி.சம்பத். தொடர்புக்கு : 9944167946.



# பிரதான் மந்திரி தன் தன்யா வேளாண் திட்ட துவக்க விழா நேரடி ஒளிபரப்பு



புதுக்கோட்டை, அக்.11

புதுக்கோட்டை மாவட்டம், வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பிரதம மந்திரியின் தன் தன்யா வேளாண்மைத் திட்டம் மற்றும் பயிர் வகைகள் தன்னிறைவு இயக்கம் தொடக்கம் மற்றும் வேளாண் உள்கட்டமைப்பு நிதியும், கால்நடை பராமரிப்பு, மண்வளம் மற்றும் உணவு பதப்படுத்துதல் துறையின் 1100க்கும் மேற்பட்ட திட்டங்களின் தொடக்க விழா மற்றும் அடிக்கல் நாட்டுதல் நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சி 11.10.25 அன்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியினை வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சுப.மாரிமுத்து வரவேற்புரை வழங்கி துவக்கி வைத்து உரையாற்றுகையில் நிகழ்ச்சியின் நோக்கங்கள் பற்றி விவரித்தார். பிரதம மந்திரியின் உரை நேரடி காணொலி ஒளிபரப்பினை விவசாயிகள் கண்டு பயனடைந்தனர். முனைவர் ம.தமிழ்ச்செல்வன், தொழில்நுட்ப வல்லுநர் (தோட்டக் கலை) மற்றும் முனைவர் வ.ப.ராகவேந்திரன், தொழில்நுட்ப வல்லுநர் (கால்நடைத்துறை) பிரதமர் உரையினை தமிழில் மொழி பெயர்த்தனர். முனைவர் அ.அழகேசன், தொழில்நுட்ப வல்லுநர் (உழவியல்), இன்று அறிவிக்கப்பட்ட பிரதமரின் நலத்திட்டங்களை விவரித்தார்.

முனைவர் செ.ஜேசுப்பிரியா பூர்ணகலா, தொழில்நுட்ப வல்லுநர் (உணவியல்), முனைவர் ஜெ.பாலமுருகன், தொழில்நுட்ப வல்லுநர் (மண்ணியல்), முனைவர் பி.கார்த்திகேயன், தொழில்நுட்ப வல்லுவர் (நுண்ணுயிரியல்) மற்றும் அனைத்து தொழில்நுட்ப வல்லுனர் களும் உரையாற்றினர். சி.ஜெயபாலன், துணை வேளாண்மை இயக்குனர், உழவர் பயிற்சி மையம், குடுமியான்மலை சிறப்புரை யாற்றி, கலந்து கொண்ட அனைத்து விவசாயிகளுக்கு மண்புழு உரம் மற்றும் கோ 5 தீவனப்புல் இடுபொருட்கள் வழங்கினார். விவசாயிகள் நிலையத்தின் செயல்விளக்க திடல்களுக்கு அழைத்து செல்லப்பட்டு மூலிகைத் தோட்டம், ஆடு வளர்ப்பு மற்றும் மீன் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட்டது.

வளாகத்தில் வேளாண்மை கண்காட்சி அமைக்கப்பட்டது. நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்குபெற்றனர். இந்நிகழ்ச்சியினை தொழில்நுட்ப உதலியாளர்கள் கருப்பசாமி, அமுல்ராஜ், சுகன்யா மற்றும் தினகரன் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

# மாநில அளவிலான சிறப்புக்குழு ஆய்வில் ரூ.14.90 இலட்சம் மதிப்பிலான விதைக்குவியலுக்கு விற்பனைக்கு தடை



ஈரோடு, அக்.11

விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு இயக்குநரின் ஆணைக்கிணங்க, கரூர் மற்றும் ஈரோடு மாவட்டம், விதை ஆய்வு துணை இயக்குநர்கள் தலைமையில் விதை ஆய்வாளர்கள் கரூர், பழனி, திண்டுக்கல், ஈரோடு, பவானி, கோபி மற்றும் காங்கேயம் கொண்ட குழு மூலமாக ஈரோடு மாவட்டத்திலுள்ள அரசு, அரசு சார்பு, தனியார் மற்றும் நர்சரி போன்ற விதை விற்பனை நிலையங்களில் 9.10.25 அன்று திடீர் ஆய்வு நடத்தப்பட்டது.

ஆய்வின் போது, விதை இருப்பு மற்றும் விதை விவர பலகை, விதை விற்பனை உரிமம், விதை இருப்பு பதிவேடு, விதை கொள்முதல் பட்டியல், பதிவுச்சான்று, முளைப்புத்திறன் அறிக்கை மற்றும் விற்பனை பட்டியல் ஆய்வு செய்யப்பட்டது.

திடீர் குழு ஆய்வு மொத்தம் 30 விதை விற்பனை நிலையங்கள் ஆய்வு செய்யப்பட்டது. விற்பனை உரிமம், இருப்பு பதிவேட்டிலுள்ள விதை இருப்பிற்கும், உண்மை இருப்பிற்கும் வேறுபாடு இருந்த விதைக் குவியல்கள், பதிவுச்சான்று இல்லாத விதைக்குவியல்கள், பதிவுச் சான்றின்படி இரக பதிவு அட்டையில் பதிவு செய்யாத விதைக்குவியல்கள் முளைப்புத்திறன் அறிக்கை

இல்லாத விதைக்குவியல்கள் மற்றும் விதைகள் சரியான முறையில் சேமிக்காத விதைக் குவியல்கள் போன்ற விதைச்சட்ட விதிமீறல்கள் காணப்படும் 15 விதைக் குவியல்களுக்கு விற்பனை தடை விதிக்கப்பட்டது. விற்பனை தடைசெய்யப்பட்ட விதைக்குவியல்களின் அளவு 3,900 கிலோ, அதன் மதிப்பு 14.90 இலட்சம் ஆகும். மேலும் ஆய்வின் போது, விற்பனைக்காக இருப்பில் வைக்கப்பட்டிருந்த விதைக் குவியல்களில் 25 எண்கள், முளைப்புத்திறன் மற்றும் புறத்தூய்மை பகுப்பாய்விற்கு விதை மாதிரிகள் எடுக்கப்பட்டன.

ஆய்வின் போது, விதை விற்பனை உரிமம் பார்வையில் தெரியும்படி மாட்டியிருக்க வேண்டும் என்றும், விதை இருப்பு மற்றும் விதை விவர பலகை தினமும் பராமரிக்கப்பட வேண்டும் எனவும், விதைகள் இருப்பு பதிவேடு மற்றும் விற்பனை பட்டியல்கள் முறையாக தினமும் பராமரிக்கப்படவும் எனவும், அனைத்து விதைகளுக்கு பதிவுச் சான்று மற்றும் முளைப்புத் திறன் அறிக்கை பராமரிக்கப்படவேண்டும் எனவும், பதிவுச் சான்று புதுப்பித்த விதைகளை மட்டும் விற்பனை செய்ய வேண்டும் எனவும் அறிவுரை வழங்கப்பட்டது. மேலும், விதைகள் உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளுடன் சேர்த்து வைக்காமல் தனியாக சேமித்து விற்பனை செய்யப்பட வேண்டும் எனவும் அறிவுரை வழங்கப்பட்டது.




இச்சிறப்பு ஆய்வின் குழுவின் தலைவர்களான னு.ஏ. ஜரின் பிரியதர்சினி, விதை ஆய்வு துணை இயக்குநர், கரூர் மாவட்டம் மற்றும் பெ.சுமதி, விதை ஆய்வு துணை இயக்குநர், ஈரோடு மாவட்டம், பத்திரிக்கைக்கு அளித்த செய்தியில் விதைச்சட்டம் 1966, விதைக் கட்டுப்பாட்டு ஆணை 1983, விதை விதிகள் 1968 மற்றும் அத்தியாவசிய பொருட்கள் சட்டம் 1955 ஆகியவற்றின கீழ் விதிமீறல் காணப்படும் விதை விற்பனை நிலையங்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப் படும் எனத் தெரிவித்தனர்.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# அடுமனைப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி

கோயம்புத்தூர், அக்.11

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் அடுமனைப் பொருட்கள் தயாரிக்கும் இரண்டு நாட்கள் பயிற்சி வருகிற 14.10.25 மற்றும் 15.10.25 தேதிகளில் நடைபெறுகிறது.

அடுமனை உணவுப் பொருட்களுக்கு தற்பொழுது மக்கள் மத்தியில், அதிக வரவேற்பு உள்ளது. அதற்கான முக்கியக் காரணம் விரும்பத்தக்க வகையிலும் பற்சுவைகளிலும் மிக எளிதில் இவை கிடைப்பதேயாகும்.

இந்தப் பயிற்சி சிறுதொழில் முனைவோருக்கு தங்களது வருமானத்தைப் பெருக்க பெரிதும் உதவியாக இருக்கும். ஆகவே, பயிற்சியின் போது கீழ்க்காணும் அடுமனைப் பொருட்கள் எளிய முறையில் தயாரிப்பதற்கான தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவையாவன:

- ரொட்டி வகைகள்
- கேக் மற்றும் பிஸ்கட்
- பப்ஸ்

இத்தொழில்நுட்பத்தில் ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770 (ரூ.1500 + GST 18%) செலுத்தி தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளலாம்.

பயிற்சியானது அறுவடைபின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், (பேருந்து நிறுத்தம் : வாயில் எண்.7, மருதமலை சாலை வழி) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்–641 003ல் நடைபெறும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடைபின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641003. அலைபேசி எண் : 94885 18268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

# பொருளாதாரத்தில் மூங்கில் சாகுபடியின் பங்கு – ஒரு கண்ணோட்டம்



மூங்கில் என்பது மனிதனின் வாழ்வில் பண்டைய காலத்திலிருந்தே மிக நெருக்கமாகப் பயன்பட்ட தாவரமாகும். இதன் பயன்பாடு வீடுகள் கட்டுதல் முதல் கைத்தொழில் பொருட்கள் வரை பரவலாக உள்ளது. உலகளவில் மூங்கில் சுமார் 35 மில்லியன் ஹெக்டேரில் பரவியுள்ளது. இதில் இந்தியா முக்கிய பங்கை வகிக்கிறது. இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்கள் (அசாம், அருணாச்சலப் பிரதேசம், நாகாலாந்து) மற்றும் தென்தமிழ்நாடு ஆகிய இடங்களில் மூங்கில் மிகுந்தளவில் வளர்கிறது. மூங்கில் சாகுபடி என்பது ஒரு சூழலியல் பொருளாதார முறை ஆகும். இது ஒரே நேரத்தில் மண், நீர், காற்று ஆகிய இயற்கை வளங்களைப் பாதுகாக்கவும், மக்களுக்கு வாழ்வா தாரத்தை வழங்கவும் உதவுகிறது. இந்நூற்றாண்டில், பச்சை பொருளாதாரம் (Green Economy) என்ற கருத்து வேகமாக வளர்கின்ற நிலையில், மூங்கில் முக்கிய பங்காற்றுகிறது.

**1. மூங்கில் சாகுபடியின் இயற்கை மற்றும் பொருளாதார சிறப்பம்சங்கள்**

மூங்கில் என்பது ஒரு புல் குடும்பத்தைச் சேர்ந்த தாவரமாக இருந்தாலும், மரங்களைப் போலவே வலிமை கொண்டது. இதன் முக்கிய தன்மைகள்

- மிக வேகமாக வளரக்கூடியது – சில இனங்கள் 24 மணி நேரத்தில் 30–45 செ.மீ வரை வளரக்கூடும்.
- சுமார் 3–4 ஆண்டுகளில் முழுமையான அறுவடைக்குத் தயாராகிவிடும்.
- ஒருமுறை நட்டு விட்டால் 30–40 ஆண்டுகள் வரை தொடர்ச்சியாக அறுவடை செய்யலாம்.
- மிகக் குறைந்த தண்ணீர், உரம் மற்றும் பராமரிப்புடன் வளரக்கூடியது.

● கார்பன் டைஆக்சைடு உறிஞ்சும் திறன் அதிகம் – ஒரு ஹெக்டேர் மூங்கில் காடு ஆண்டுக்கு 12–15 டன் கார்பன் உறிஞ்சுகிறது.

● இது உயிர் பல்வகைமையை (biodiversity) பாதுகாக்க உதவுகிறது.

இதன் மூலம் மூங்கில் சாகுபடி, விவசாய வருமானத்தையும், சுற்றுச்சூழல் சமநிலையையும் ஒரே நேரத்தில் வலுப்படுத்துகிறது.

**2. கிராமிய பொருளாதாரத்தில் மூங்கில் சாகுபடியின் தாக்கம்**

மூங்கில் சாகுபடி கிராமப்புற மக்களுக்கு பொருளாதார ரீதியாக ஒரு புதிய பாதையைத் திறக்கிறது.

**(a) வேலைவாய்ப்புகள்**

● மூங்கில் வளர்ப்பு, அறுவடை, உலர்த்தல், வடிவமைத்தல், கைத்தொழில் உற்பத்தி, போக்குவரத்து ஆகிய அனைத்தும் தொடர்ச்சியான வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்றன.

● ஒரு ஹெக்டேர் மூங்கில் தோட்டம் வருடத்திற்கு 250–300 மனித நாட்கள் வேலைவாய்ப்பை வழங்குகிறது.

● குறிப்பாக பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு கைத்தொழில் துறையில் வேலைவாய்ப்பு வாய்ப்புகள் அதிகம்.

**(b) வருமான உயர்வு**

மூங்கில் பயிரிடும் விவசாயிகள் ஆண்டுக்கு 60,000 – 1,50,000 ரூபாய் வரை வருமானம் பெறுகின்றனர். இதனை சிறு அளவிலான கூட்டுறவு உற்பத்தி குழுக்களாக (Self Help Groups) அமைத்து அதிகபட்சம் பெற முடியும்.

**(c) தொழில்முனைவு வளர்ச்சி**

மூங்கில் அடிப்படையிலான உற்பத்திகள் – கூடை, நாற்காலி, பூச்செண்டு, திரை, அலங்காரப் பொருட்கள், பல் துலக்கி, மூங்கில் பாட்டில், ஸ்ட்ரா போன்றவை – சிறு மற்றும் நடுத்தர தொழில்களாக வளர முடியும். இவ்வாறான கைத்தொழில்கள் கிராமிய பொருளாதாரத்தில் மகளிர் தொழில்முனைவை ஊக்குவிக்கின்றன.

**3. சுற்றுச்சூழல் பொருளாதாரம் மற்றும் மூங்கில்**

சுற்றுச்சூழல் பொருளாதாரம் (Environmental Economy) என்றால் இயற்கை வளங்களைப் பாதுகாத்து பொருளாதார வளர்ச்சியை அடைவது என்று பொருள். அதில் மூங்கில் முக்கிய பங்கு வகிக்கிறது

● **கார்பன் உறிஞ்சல் (Carbon Sequestration) :** மூங்கில் மரங்களைவிட இரட்டிப்பு அளவு கார்பன் டைஆக்சைடைக் காற்றிலிருந்து உறிஞ்சுகிறது.

● **மண் பாதுகாப்பு :** ஆழமான வேரமைப்பு காரணமாக மண் அரிப்பைத் தடுக்கிறது.

● **நீர் பாதுகாப்பு :** மண் ஈரப்பதத்தை நீண்ட நேரம் தக்க வைக்கிறது.

● **மர மாற்று :** மூங்கில் மரம் போலவே கட்டிடப் பணிகளில் பயன்படுத்தப்படுவதால் வனச்சூழல் அழிவை குறைக்கிறது.

● **பசுமை தொழில்கள் :** பிளாஸ்டிக் பொருட்களுக்கு இயற்கை மாற்றாக மூங்கில் பொருட்கள் பயன்படுகின்றன.

இதன் மூலம் மூங்கில் – சூழல் நட்பு வருமான மூலமாக – விளங்குகிறது.

**4. மூங்கில் தொழில்துறை வளர்ச்சி மற்றும் வர்த்தக வாய்ப்புகள்**

மூங்கில் தற்போது பல துறைகளில் வணிக வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது

**(a) கட்டிடத் துறை**

மூங்கில் கம்பங்கள், பலகைகள், கூரைப்பலகைகள், தளப் பலகைகள், மரச்சாமான்கள் போன்றவற்றில் பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது.

**(b) கைத்தொழில் மற்றும் அலங்காரப் பொருட்கள்**

கைத்தொழில் பொருட்கள், சுவர்சட்டைகள், வாத்தியங்கள், பண்டிகை அலங்காரங்கள் ஆகியவற்றில் மூங்கில் பயன் படுகிறது.

**(உ) உணவு மற்றும் மருந்துத் துறை**

மூங்கில் முளைகள் (Bamboo shoots) புரதம், நார்ச்சத்து, தாதுக்கள் நிறைந்தவை. இதனால் இது ஆரோக்கிய உணவுப் பொருளாக உலகளவில் புகழ் பெற்றுள்ளது.

**(d) தொழில்துறை உற்பத்தி**

மூங்கில் நார் (fiber) துணி தயாரிப்பிலும், பிளைவுட், காகிதம், கரும்பலகைகள் தயாரிப்பிலும் பயன்படுகிறது.

**(e) ஏற்றுமதி வாய்ப்பு**

இந்தியாவில் இருந்து சீனா, ஜப்பான், தாய்லாந்து, யூரோப் ஆகிய நாடுகளுக்கு மூங்கில் பொருட்கள் ஏற்றுமதி செய்யப் படுகின்றன.

இதன் மூலம் வெளிநாட்டு நாணயம் ஈட்டப்படுகிறது.

**5. அரசாங்கம் மற்றும் கொள்கை ஆதரவு**

மூங்கில் சாகுபடிக்கு அரசு பல முயற்சிகளை மேற்கொண்டு உள்ளது.

● National Bamboo Mission (NBM) – 2018ல் தொடங்கப்பட்ட இத்திட்டம் மூங்கில் நாற்று உற்பத்தி, சாகுபடி, மதிப்புக் கூட்டு உற்பத்தி, சந்தை ஆதரவு ஆகியவற்றை ஊக்குவிக்கிறது.

● National Agroforestry Policy (2014) – விவசாய நிலங்களில் மூங்கில் மற்றும் மர வளர்ப்பை ஒருங்கிணைக்க வழிகாட்டுகிறது.

● Tamil Nadu Bamboo Resource Centre (TN BRC) தமிழ் நாட்டில் மூங்கில் உற்பத்தி மற்றும் செயலாக்க மையங்களை நிறுவி பயிற்சி வழங்குகிறது.



● Micro, Small and Medium Enterprises (MSME) திட்டங்களின் கீழ் மூங்கில் கைத்தொழில்களுக்கு நிதியுதவி, பயிற்சி, சந்தை வாய்ப்பு வழங்கப்படுகிறது.

## 6. சவால்கள் மற்றும் எதிர்கால முன்னேற்றம்

மூங்கில் சாகுபடியின் வளர்ச்சிக்கு முன் சில சவால்கள் உள்ளன

- சந்தை இணைப்புகள் குறைவு
- செயலாக்க மையங்களின் பற்றாக்குறை
- தரநிலைப்படுத்தல் (standardization) இல்லாமை
- விவசாயிகள் மத்தியில் விழிப்புணர்வு குறைவு

**இவற்றை கடக்க**

- மூங்கில் கூட்டுறவு சங்கங்கள் உருவாக்குதல்,
- மதிப்புக் கூட்டு தொழில்நுட்பங்கள் (valueadded processing units) அமைத்தல்,
- பயிற்சி மற்றும் மார்க்கெட்டிங் ஆதரவு,
- பயோடெக் ஆராய்ச்சி மையங்கள் மூலம் உயர் விளைச்சல் இனங்கள் உருவாக்குதல் ஆகியவை மேற்கொள்ளப்பட வேண்டும்.

எதிர்காலத்தில் மூங்கில் இந்தியாவின் “பச்சை தங்கம்” என விளங்கும் வாய்ப்பு அதிகம்.

மூங்கில் சாகுபடி ஒரு தாவர அடிப்படையிலான பொருளாதார மாற்றத்தின் அடையாளமாக விளங்குகிறது. இது கிராமப்புற மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தி, சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் திறன் கொண்டது. அரசாங்கம், தனியார் நிறுவங்கள், விவசாயிகள் ஆகியோர் இணைந்து செயல்பட்டால், மூங்கில் இந்தியாவின் சூழல் பொருளாதார வளர்ச்சியின் முக்கிய தளமாக மாறும். மூங்கில் சாகுபடியின் மூலம் பசுமையும் பொருளாதாரமும் இணைந்த “நிலையான வளர்ச்சி (Sustainable Development)” இலக்கை அடைய முடியும்.

தகவல் : **வெங்கடேஷ் ம, நிவேதா, ஆ.ல. உதவிப் பேராசிரியர்கள், (தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல்), ஸ்ரீதேவி ச, நான்காமாண்டு மாணவி, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு.**

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்—தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741